செ.வெ.எண். 14/நவம்பர் தேதி : 04.11.2016

# தருமபுரி மாவட்டம்

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தொகுதி - 4 ல் (Group-IV Services) தேர்வு மையத்தில் கைபேசி, கால்குலேட்டர் மற்றும் எலக்ட்ரானிக் கைகடிகாரம் (Digital watch)ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளது - மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்!







தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கட்டிடத்தில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தொகுதி-IV- (Group-IV Services) தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :-

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தொகுதி-IV-ல் (Group-IV Services) அடங்கிய பல்வேறு பதவிகளுக்கான போட்டித் தேர்வு 06.11.2016 **(ஞாயிற்றுக் கிழமை)** அன்று முற்பகல் மாவட்டம் முழுவதும் உள்ள 131 மையங்களில் நடைபெறவுள்ளது. தேர்வு மையங்களில் தேர்வுக்கான அனைத்து ஏற்பாடுகளும் முழு அளவில் செய்யப்பட்டுள்ளது. தருமபுரி மாவட்டத்தில் மொத்தம் 51,398 தேர்வர்கள் தேர்வெழுத உள்ளனர். தேர்வு எழுதவரும் விண்ணப்பதாரர்கள் தேர்வு மையத்தில் **கைபேசி, கால்குலேட்டர் மற்றும் எலக்ட்ரானிக் கைகடிகாரம் (Digital watch)** போன்ற தகவல் பரிமாற்ற உபகரணங்கள் மற்றும் கால்குலேட்டர் போன்ற உபகரணங்களை பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டார்கள். எனவே, அவற்றை தேர்வு மையங்களுக்கு கொண்டு வருவதை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. அவ்வாறு கொண்டு வரப்படும் பொருட்கள் தேர்வுக் கூடத்தில் தடை செய்யப்பட்டுள்ளது என்பதால் அனுமதிக்க இயலாத நிலையில் அவற்றின் பாதுகாப்புக்கு அவர்களே பொறுப்பேற்க வேண்டும். தேர்வு எழுத வருபவர்கள் மட்டும் உள்ளே அனுமதிக்கப்படுவர். அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தப்படும் தொகுதி-IV (Group-IV Services)-தேர்வுக்காக தருமபுரி மாவட்டம் முழுவதும் துணை ஆட்சியர் தலைமையில் 26 பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

தேர்வு மையங்களில் முறைகேடுகள் நடைபெறுவதை தடுக்க கண்காணிப்பு கேமராக்கள் பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே அனைத்து தேர்வர்களும் தேர்வு மையத்தில் அச்சமின்றி தேர்வுகள் எழுதவும், எந்தவிதமான முறைகேடான நடவடிக்கைகளிலும் ஈடுபடக்கூடாது. மேலும் தேர்வு மையங்கள் வழியாக செல்லும் பேருந்துகள் அனைத்தும் தேர்வு மையங்களில் நிறுத்தம் செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி. பாப்பாத்தியம்மாள், அரசு பணியாளர் தேர்வாணையம் சார்பு செயலாளர் திரு. சபிபேக், விரிவு அலுவலர் திரு. வேலாயுதம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.